# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
# மாற்று பரிகாரத் தீர்வு மைய வளாகம், தருமபுரி

## பத்திரிக்கைச் செய்தி

**அறிவிக்கை எண்: 01/2025** **தேதி: 10.10.2025**

## தன்னார்வ சட்டப்பணியாளர்கள் சேர்க்கை அறிவிப்பு

**(NOTIFICATION OF PARA LEGAL VOLUNTEERS)**

தருமபுரி மாவட்ட சட்ட பணிகள் ஆணையத்திற்கு சட்ட உதவி மற்றும் சட்ட அறிவை பாமர மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக தன்னார்வ சட்டப்பணியாளர்கள் (Para Legal Volunteers) தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள். தேர்ந்தெடுக்கப்படும் **21** தன்னார்வ சட்டப்பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.750/- வீதம் அலுவலர் உத்தரவுக்கு இணங்க பணிசெய்யும் நாட்களுக்கு மட்டும் ஊதியம் வழங்கப்படும். தருமபுரி மாவட்டத்தை சார்ந்தவர்கள் தனத்னார்வ சட்டப்பணியாளர்களுக்கு கீழ்கண்ட பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
3. சமூகப் பணியில் முதுநிலைக்கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
4. அங்கன்வாடி பணியாளர்கள்
5. மருத்துவர்கள் / உடல் நல நிபுணர்கள்
6. மாணவர்கள் மற்றும் சட்ட மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞராகப் பதிவு செய்யும் வரை)
7. அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப் பிரமுகர்கள்
8. மகளிர் குழுக்கள் மற்றும் வறியோரை உள்ளடக்கிய சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்
9. நீண்ட கால தண்டனை பெற்று சிறையிலுள்ள படித்த சிறைவாசிகள்
10. மாவட்ட/ வட்ட சட்டப்பணிகள் தன்னார்வ சட்டப் பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்கள்.

மேற்கண்ட பிரிவினர்களில் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று தன்னார்வ சட்டப்பணியாளர்களாக (Para Legal Volunteers) பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை [https://dharmapuri.dcourts.gov.in/](https://dharmapuri.dcourts.gov.in/) என்ற தருமபுரி மாவட்ட நீதிமன்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்களை மாவட்ட சட்ட பணிகள் ஆணையக்குழு, நீதிமன்ற வளாகம், ADR அலுவலகம், தடங்கம், தருமபுரி-636705 என்ற முகவரிக்கு **25.10.2025** தேதி **மாலை 5.45** மணிக்குள் பதிவு தபால் மூலமாகவோ (அ) நேரிலோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்படி கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பணி நிரந்தரம் செய்ய உரிமை கோர முடியாது. சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி எதுவும் கிடையாது. வேலை செய்த நாட்களுக்கு மட்டும் மதிப்பூதியம் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் சேவை மனப்பான்மை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட சட்ட பணிகள் ஆணையத்தினை அணுகவும்.

THIRUMAGAL C
Digitally signed by THIRUMAGAL C
Date: 2025.10.10 15:59:38 +0530

தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு,
தருமபுரி.

நகல்.

1. All the Judicial Officers in this District (To Publish in the Notice Board)
2. The Public Relation Officer (with a request to give wide publicity of the above notification/this NEWS in Tamil News Papers)
3. System Analyst, District Court to publish in District Court Website
4. Notice board of District Legal Services Authority, Dharmapuri

# <u>சட்ட தன்னார்வலர்களுக்கான விண்ணப்ப படிவம்</u>

| விண்ணப்பதாரர் புகைப்படம் (சுய சான்றொப்பம் இடவும்) |
|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தகப்பனார்/கணவர் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4. | பாலினம் | : | |
| 5. | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி (வேறு ஏதாவது வேலை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 6. | விண்ணப்பதாரரின் சாதி மற்றும் மதம் | : | |
| 7. | நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி எண் | : | |
| 8. | தகவல் அனுப்ப வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண் | : | |
| 9. | காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 10. | இதற்கு முன் சட்ட தன்னார்வலராக வேலை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் | : | |
| 11. | விண்ணப்பிக்கும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அல்லது வட்ட சட்டப் பணிகள் குழுவின் பெயர். தருமபுரி/ அரூர் / பாலக்கோடு/ பென்னாகரம் /பாப்பிரெட்டிப்பட்டி/ காரிமங்கலம். | : | |

விண்ணப்பதாரரின் கையொப்பம்

சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை சேவை மட்டுமே, உத்தியோகம் இல்லை, தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை சேவைக்கு தகுந்த வெகுமானம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்